# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:22** **தேதி:-27.02.2015**

**ஏப்ரல் 21 & 22 இரண்டு நாட்கள் வேலை நிறுத்தம்-FORUM முடிவு**

அன்பார்ந்த தோழர்களே,

நமது அகில இந்திய FORUMத்தின் கூட்டம் அதன் தலைவர் தோழர் C.C.சிங் அவர்களின் தலைமையில் இன்று (27.02.2015) நடைபெற்றது. FORUM அமைப்பாளர் தோழர் V.A.N.நம்பூதிரி அனைவரையும் வரவேற்றார். BSNLன் புத்தாக்கத்திற்கான வேலை நிறுத்தம் தொடர்பாக ஒரு நீண்ட விவாதம் நடைபெற்றது. கள நிலைமைகளை கணக்கில் கொண்டு நடைபெற்ற இந்த விவாதத்தில், அனைத்து ஊழியர்களை திரட்டுவதையும் நமக்கு ஆதரவாக பொது மக்களின் கருத்துக்களை திரட்டுவதையும் உறுதி செய்வதற்காக கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக மேற்கொள்ளப்பட்டன.

01) 2015, ஏப்ரல் 21 மற்றும் 22 தேதிகளில் இரண்டு நாட்கள் வேலை நிறுத்தம் மேற்கொள்வது.
02) இதற்கான வேலை நிறுத்த அறிவிப்பை 2015, மார்ச் 12 ஆம் தேதி வழங்குவது.
03) வேலை நிறுத்த அறிவிப்பு வழங்க உள்ள 2015, மார்ச் 12 ஆம் தேதி நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவது.
04) வேலை நிறுத்த கோரிக்கைகளை விளம்பரப்படுத்தும் வகையில் மார்ச் 12 அன்று அனைத்து மாநில தலைநகர்களிலும் FORUM சார்பாக பத்திரிக்கையாளர் சந்திப்பை நடத்துவது.
05) மாநில அளவிலான கருத்தரங்கங்களை நடத்தாத மாநிலங்கள் உடனடியாக அந்த கருத்தரங்கங்களை நடத்த வேண்டும். மேலும் வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட மாவட்ட அளவிலான கருத்தரங்கங்களையும், கிளைப் பொதுக்குழுக் கூட்டங்களையும் சிறப்பாக நடத்திட வேண்டும்.
06) ஒரு கோடி கையெழுத்துக்களை பெறுவதற்கான கையெழுத்து இயக்கத்தின் கடைசி தேதி 31.03.2015 என்று நீட்டிக்கப்பட்டுள்ளது. அனைத்து மாநிலங்களும் அவற்றின் இலக்கினை (ஒரு ஊழியருக்கு 50 என்கின்ற அளவில்) இந்த தேதிக்குள் முடித்திட வேண்டும்.
07) வேலை நிறுத்த அறிவிப்பில் பொது செயலாளர்கள் மட்டுமே கையெழுத்திட வேண்டும். எனவே அனைத்து பொது செயலாளர்களும் மார்ச் 12 ஆம் தேதி புதுடெல்லியில் இருக்க வேண்டும்.

தமிழகத்தை பொருத்த வரை நாம் இதுவரை மாவட்டங்களில் இருந்து பெறப்பட்ட 4,35,272 கையெழுத்துக்களை அகில இந்திய FORUMத்திடம் வழங்கி உள்ளோம். இன்னமும் சுமார் ஐந்து லட்சம் கையெழுத்துக்களை பொது மக்களிடம் பெற்றுத் தர வேண்டும். இதற்கான பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். அதே போல அனைத்து மாவட்டங்களிலும் கருத்தரங்கங்களை நடத்திட வேண்டும். பின்னர் அனைத்து கிளைகளிலும் வேலை நிறுத்தத்திற்கான பொதுக்குழுக் கூட்டங்களை நடத்திட வேண்டும். இவற்றிற்காக மாவட்ட சங்கங்கள் திட்டமிட்டு செயல்பட்டு வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட அனைத்து பணிகளையும் மேற்கொள்ள வேண்டும் என தமிழ் மாநில சங்கத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**